REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: வைகாசி 30உ திங்கள் (13—6—55) ★ ★ வெளியூர்: வைகாசி 31உ செவ்வாய் (14—6—55) [இதழ் 310

நிற வேற்றுமையை எதிர்த்து பிரிட்டனில் இயக்கம்

பிரிட்டனில் நிற வேற்றுமை அனுசரிக்கப்படும் இடங்களில் அதை எதிர்த்து இயக்கம் நடத்துவதற்கு பிரஜா உரிமைப் பாதுகாப்புக் கவுன்சில் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

பிரிட்டனில் நிறவேற்றுமை அதிகரித்து வருவதாகவும், 'கருப்பர்'களுக்கு பிரிட்டனில் சாதாரண குடிமக்களுக்கு அளிக்கப்படும் சமூக சேவைகளும் மறுக்கப்படுவதாகவும், அவர்களுடன் சேர்ந்து வேலை செய்ய இசைவதில்லை என்றும், இந்த நிலைமை பற்றி கவலை தெரிவிப்பதாகவும் கவுன்சிலின் ஆண்டு மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதாம்.

'பட்டம் கோரியதையும் பனம்பள்ளி செய்யத் தயங்குகிறார்'

'காங்கிரஸ் ஆட்சியாளர்கள் - தமிழர்களுக்கிழைத்த இரு தவறுகள்'

'எதையும் மறக்கவில்லை! எதையும் கற்கவில்லை!'

தி-கொ. காங்கிரஸ் ஆட்சியினருக்கு குஞ்சன் நாடார் கண்டனம்

"தமிழர்களுக்கு நேர்மையான நீதி வழங்கி, அவர்களுடைய நல்லாதரவைப் பெற தி-கொ. காங்கிரஸ் தவறிவிட்டது;

"காங்கிரஸ் ஆட்சிக்குவந்த இவ்வளவு குறுகிய காலத்திற்குள் தமிழர்களுக்கு இரு தவறுகளை இழைத்துள்ளது;

"தமிழர்களால் தெளிவாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள போலீஸ் அதிகாரிகளுக்கு காங்கிரஸ் ஆட்சியாளர் பரிசு வழங்கியுள்ளது ஒரு தவறு;

"தி. த நா. காங்கிரஸ் தலைவர்கள் மீது தொடரப்பட்டுள்ள வழக்குகளை இன்னும் திரும்பப் பெறாமல் இருப்பது மற்றொரு தவறு."

—இவ்வாறு தி-கொ தமிழ் மாநிலக் கிளர்ச்சியின்போது சர்வாதிகாரியாகப் பணி புரிந்த ஏ. குஞ்சன் நாடார் பத்திரிகை நிருபர்களிடம் கூறியுள்ளார்.

மற்ற 11 தி. த. நா. காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் தி. கொ. காங்கிரசுடன் ஒன்றுபட்ட மூன்று திங்கள் கழித்தே, குஞ்சன் நாடார் காங்கிரசுடன் கூட்டு சேர்ந்தார்.

"தென் திருவாங்கூரில், தமிழர்கள் மீது போலீஸ் நடத்திய அளவு கடந்தலை விசாரித்தறிய அரசாங்கம் தந்துள்ள வாக்குறுதியைத் தகர்த்தெறியவே, போலீஸ் அதிகாரிகளுக்கு பரிசளிக்கும் அரசியல் கூத்து நடைபெற்றிருக்கிறது," என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

'இலஞ்சம், கொள்ளை, சித்திரவதை ஆகிய பயங்கரமான குற்றங்களைத் தீவிரமாகச் செய்திருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள போலீஸ் அதிகாரிகளுக்கு, 'அவைகளைச் செய்திருக்கிறார்கள்,' என்பதற்காகவே, அரசாங்கம் பரிசளித்திருக்கிறது எனவும், போலீஸ் தலைமை அதிகாரியே அக்குற்றங்களைச் செய்திருந்த போதிலும் அது விஷயத்தில் அரசாங்கம் தனது பொறுப்பைத் தட்டிக்கழிக்கக்கூடாது' எனவும், 'பரிசளிப்பினால், எங்களுடைய குற்றச்சாட்டுகளை அரசாங்கம் ஏற்கனவே தீர்மானித்துவிட்டது என்று ஏற்படுகிறது' எனவும், அவர் விளக்கிக் கூறியுள்ளார்.

"திருவாங்கூர் ஆட்சியைச் சேர்ந்த ஏதாவது ஒரு அதிகாரியைக்கொண்டு போலீஸ் அளவு கடத்தல் விசாரிக்கப்படுமானால், அது கண்டிப்பாக வெறும் கண்துடைப்பாகத்தான் இருக்க முடியும். எனவே, விசாரணை முறையில் தமக்கு ஏதாவது நம்பிக்கை இருக்குமானால், விசாரணைத் துவங்கப்படுவதற்கு முன்பாக தம்மால் போலீஸ் அதிகாரிகளுக்குத் தரப்பட்டுள்ள பரிசுகளை, அரசாங்கம் திரும்பப் பெற்றாக வேண்டும் அல்லது விசாரணையை தி. கொ.-வைத் தவிர்த்து, வேறு அரசாங்கத்தில் வாழும் நபர்களைக் கொண்டு நடத்த வேண்டும்."

தமிழ் மாநிலக் கிளர்ச்சியில் பங்கு கொண்டிருந்தபொழுது, சென்ற ஆண்டு ஆகஸ்டு 12-ந் தேதி தான் கைது செய்யப்பட்ட பிறகு இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள் முன்னிலையில் போலீசார் தன்னைத் தாக்கியதாகவும், அவர்களைத் தனக்கு நன்றாகத் தெரியும் என்றும் அவர் குறிப்பிட்டார். தனித்த முறையில் அவர்கள் மீது வழக்கெடுக்கத் தாம் கருதிக்கொண்டிருப்பதாகவும், அது பற்றி இன்னும் திட்டவட்டமான முடிவிற்குத் தாம் வரவில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

காங்கிரஸ் கட்சியில் தான் பெற்றுள்ள அனுபவத்தைக் குறித்து நிருபர்கள் கேட்டதற்கு :—

சென்ற காலத் தவறுகளிலிருந்து காங்கிரஸ் தலைமை நற்பாடம் கற்றிருக்குமெனத் தான் நம்பினதாகவும், ஆனால் துரதிருஷ்டவசமாக, வழக்கம் போல் காங்கிரஸ் தலைமை ஆட்சித் துறையிலும், கட்சித் துறையிலும் முன்னாள் போக்கையே செயலாற்றி வருவதாகவும் குஞ்சன் நாடார் விளக்கம் கொடுத்தார்.

அனுசரிக்கப்பட்டுவரும் இப்போக்கினால் காங்கிரஸ் மேலும் சீரழிந்துபோக நேரிடும் என அவர் எச்சரித்தார்.

"தி. த. நா. காங்கிரஸ் மீது தொடரப்பட்டிருக்கும் வழக்குகளை அரசாங்கம் திரும்பப் பெறாததின் காரணமாக, காங்கிரஸ் பலம் குன்றிப்போயிருக்கிறது."

"மலையாளிகள் உட்பட மக்கள் அனைவரும், வழக்கு திரும்பப் பெறப்படுவதை விரும்புகிறார்கள். சட்டசபையின் கடைசி கூட்டத்தில் ம. சோ. க முதல் மந்திரியாக இருந்த பட்டம் தாணு பிள்ளைகூட வழக்கைத் திரும்பப் பெற வேண்டும் எனக் கோரினார். அவர் கோரிக்கையில் இருந்த ஒரே ஒரு நிபந்தனை, 'தி. த. நா. காங்கிரஸ் தலைவர்கள் வருத்தம் தெரிவிக்க வேண்டும்' என்பதேயாகும். நான் ஒரு காங்கிரஸ்காரன் என்ற முறையிலும், மாநில காங்கிரஸ் கட்சியின் நலன் கருதியும், தான் செய்துள்ள தவறுகளை திருத்திக்கொள்ள அரசாங்கம் முன்வர வேண்டும் என வற்புறுத்துகிறேன்,"

என்று ஏ. குஞ்சன் நாடார் நிருபர்களிடம் கூறியுள்ளார்.

போலீசாரின் அதிக்கிரமச் செயல்கள்

"திரு-கொச்சியில் உள்ள திருச்சூர் மாவட்டத்தைச் சேர்ந்த காலாடி எனுமிடத்தில் போலீசார் புரிந்த அத்துமீறிய செயல்கள் பற்றி சர்க்கார் விசாரணை நடத்தும்," என்று முதன் மந்திரி பனம்பள்ளி கோவிந்த மேனன் கூறியிருக்கிறார்.

பாப்பு என்ற ஒருவர், போலீசாரின் சித்திரவதையினால் கொல்லப்பட்டதாக காலாடி போலீசார் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது; இதனையொட்டி இரண்டு போலீசார் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கி வைக்கப்பட்டிருக்கின்றனர்; என்றாலும், போலீஸ்-இன்ஸ்பெக்டர்-ஜெனரல், 'பாப்பு இறந்ததற்குக் காரணம் போலீசாரின் பலாத்காரச் செயலல்ல—மாறாக பாப்பு சிக்கிக்கொண்ட விபத்துதான் காரணம்,' என்று கூறியிருப்பதாகவும் தெரியவருகிறது.

இவை சரிதானா என்பது பற்றியும், உண்மை நிலைமையை அறிந்துகொள்ளவும் சர்க்கார் விசாரணை நடத்தவிருப்பதாக முதன் மந்திரி தெரிவித்திருக்கிறார்.

கடந்த 1954 ஆகஸ்டு 11-ல், தென் திருவாங்கூரில், போலீசார் அக்கிரமமாக நடந்துகொண்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் பற்றியும் சர்க்கார் விசாரணை நடத்தும் என்றும் முதன் மந்திரி குறிப்பிட்டிருக்கிறார்.

'பிர்லா'க்கள் ஆதரவு பெற்றது காங்கிரஸ்! சாமானிய மக்களின் ஆதரவைக் கோருகிறது தி. மு. கழகம்!

இரும்பு காய்ந்துள்ளது! வாளும் வேலும் தயாராக வேண்டும்!

மாதவரம் கூட்டத்தில் அண்ணா விளக்கம்

"'நேற்றிரவு ஒரு கனவு கண்டேன்—காங்கிரசுக்குப் பணம் தேவை என நீங்கள் கேட்பதுபோல; என் அந்தராத்மா உங்களுக்கு அள்ளிக் கொடுக்க வேண்டுமென்றது; ஆனால், எவ்வளவு தொகை என்பது எனக்குத் தெரியவில்லை; எனவே, இத்துடன் தொகை குறிப்பிடாத 'செக்' (Blank Cheque) அனுப்பியுள்ளேன்; தங்களுக்கு எவ்வளவு தேவையோ அவ்வளவு பணம் பெற்றுக்கொள்ளலாம்,' என்று, காந்தியாருக்கு, பிர்லா கடிதம் வரைந்திருந்தார் என்று பத்திரிகைகளில் முன்பு ஒரு செய்தி வந்தது; காங்கிரசுக்கு துவக்க காலத்தில் இல்லாவிடினும் 'காங்கிரஸ் தான் நாட்டை ஆளப்போகிறது' என்றவுடன், கோடிக் கணக்கான பணத்தை 'பிர்லா'க்கள் அள்ளிக் கொடுத்தனர்.

"'ஆச்சாரியாரும், சத்தியமூர்த்தியும் காங்கிரஸ் சார்பில் போராட்டத்தில் ஈடுபடுகின்றனரா? அவர்கள் குடும்பம் திண்டாடாமல் பார்த்துக்கொள்கிறோம்; ஆயிரம்—இரண்டாயிரமென பணம் தருகிறோம்,'—என்று முன் வந்தனர்.

"போராட்டத்தில் காங்கிரசாருக்கு தடியடியால் காயங்களா? கவலை வேண்டாம்; மருத்துவ சிகிச்சையை எவ்வளவு பணம் கொடுத்தேனும் நாங்கள் செய்கிறோம்,'—என்று கூறி காங்கிரசை ஆதரித்தனர் 'பிர்லா'க்கள்—பணக்காரர்கள்.

"ஆனால், நமக்கு, இன்றைக்கிருக்கும் நிலையோ அதற்கு நேர்மாறானது; 'நம்மிடம் பணக்காரர்கள் இருக்கிறார்களா?' என்றால், 'இல்லை' என்பது மட்டுமல்ல; நாட்டில் உள்ள பணக்காரர்களின் தொல்லைகளைச் சமாளிக்க வேண்டியவர்களாயுமிருக்கிறோம்.

"உங்களுக்கு நினைவிலிருக்கலாம்—சில ஆண்டுகளுக்கு முன் ஆச்சாரியாருக்குக் கருப்புக் கொடி காட்ட முடிவெடுத்திருந்தது, தி. மு. கழகம்; கோட்டை இரயில் நிலையத்தருகில், கருப்புக் கொடி காட்டுவதற்காகக் கூடியிருந்தோரை போலீசார் குதிரைமீதேறிக் கொண்டு துரத்தித் துரத்தி அடித்தார்கள்; பேராசிரியர் அப்பாதுரையார் படுகாயப்படுத்தப்பட்டார்; அப்போது அவர், வைத்திய சிகிச்சைக்காக தங்கசாலையிலிருந்த நமது கழக அலுவலகத்திற்குக் கொண்டுவரப்பட்டார்; அந்தத் தெருவிலேயே டாக்டர்கள் இருந்தனர் பலர்; ஒருவரைப் போய்க் கூப்பிட்டோம்; வருவதாக முதலில் ஒத்துக்கொண்ட அவர், 'வடநாட்டு மந்திரிகளுக்கு எதிராகக் கருப்புக் கொடி பிடித்ததற்காக போலீசார் அடித்தார்கள்; அதனால் காயம் பட்டது,' என்று கேள்விப்பட்டவுடன், சிகிச்சை செய்ய வர மறுத்துவிட்டார்—அந்த டாக்டர்; 'சர்க்காரின் கோபத்திற்கு ஆளாக நேரிடக்கூடும்,' என்ற அச்சத்தால் அவர் சிகிச்சை செய்ய மறுத்தார்.

"நம் கழகத்தில் உள்ளவர்கள் எல்லாம் மிகச் சாதாரண உழைப்பாளிகள்—மத்தியதர வர்க்கத்தினர்—சிறு சிறு கடை வியாபாரிகள்—அவ்வளவுதான்; இவர்கள்தான் கழகத்தை நடத்துபவர்கள்.

"கழகம், அடுத்தாற்போல் தனது பெரும் நடவடிக்கையாக திருச்சியில் இரண்டாவது மாநில மாநாடு நடத்த இருக்கிறது; அந்த மாநாட்டிற்கு, ரூ 25,000 துவக்கச் செலவிற்கெனத் தேவைப்படுகின்றது; நம்மிடம், அன்றும் இன்றும், காங்கிரசிற்கு ஆதரவாக இருந்துவரும் பெரும் பணக்காரர்களைப் போல் எவரும் கிடையாது—ஆயிரக்கணக்கில் பணம் தர! மக்கள்தான்—கழகத் தோழர்கள்தான் தங்களாலான சிறு சிறு தொகைகளைத் தந்து உதவவேண்டும்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 13—6—'55 திங்கள்

ஆச்சாரியாரின் அந்தரங்கம்!

பிணி ஏற்பட்ட பிறகு தக்க மருந்திட்டு அதைக் குணப்படுத்த முயற்சிப்பதைக் காட்டிலும், பிணியே ஏற்படாமல் இருக்க அதற்குரிய தடுப்பு முறைகளை முன் கூட்டியே மேற்கொள்ளுவதுதான் விரும்பக் கூடியதாகும்—வரவேற்கக் கூடியதுமாகும். குறிப்பிட்ட ஒரு பிணி ஒருவரைப் பற்றிக் கொள்ளுகிறவரையில் காத்திருந்து, எச்சரிக்கையும் அக்கறையும் இன்மையால் அப்பிணியை முற்றவிட்டு, அதன் பிறகு குணமாக்க மருந்து தேடுவது என்பது, அறிவுடைமையாகாது — எள்ளி நகையாடத் தக்கதுமாகும்.

அம்மை, காலரா, பிளேக் போன்ற தொத்து நோய்களுக்குத் தடுப்பு முறை ஊசிகளை முன்னெச்சரிக்கையாக மக்களுக்குப் போட்டு வருவது, இன்றைய உலகில் மிகமிகச் சாதாரண சம்பவமாக இருந்து வருகிறது. மேற்கூறிய தடுப்பு ஊசிமுறை, நூற்றுக்கு நூறு பங்கு, நோயைப் பற்றவிடாமல் தடுப்பதில் முழு வெற்றி பெற்றிருக்கிறது எனக் கூறுவதற்கில்லை. ஆனால், பெரும்பான்மையான விவகாரத்தில், தடுப்பு ஊசி முறை திட்டவட்டமான நற்பயனைக் கொடுத்திருக்கிறது என்பதை மறுப்பவர் கிடையாது.

'சக்ரவர்த்தித் திருமகன்' குறித்து, மட்டைக்கு இரண்டு கீற்று என விளக்கிக் கூறி விட்ட பிறகு, எப்படியும் தனது விஷம புத்திக்கு வேறு வேலை இருந்தாக வேண்டுமே என்ற எண்ணத்தினாலோ என்னவோ, சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார், தனது அறிவிற்கும் ஆற்றலுக்கும் அனுபவத்திற்கும் அப்பாற்பட்ட விவகாரத்திலும் வாய் வைக்கக் கிளம்பி இருக்கிறார். தனக்கு எந்த வகையிலும் துளியும் தொடர்பற்ற மருந்துத் துறையில் ஆச்சாரியார் தலையிட்டு, வீண் குழப்பத்தை நாட்டில் தூவி, மருத்துவ நிபுணர்களிடமிருந்து கிடைக்கும் வெகுமதிகளையும் பெற்று வருகிறார்.

ஆச்சாரியாரின் இப்புதிய கோலம், இந்தியப் பேரரசில் பொறுப்பேற்றிருக்கும் காங்கிரஸ் மேலிடத்தார் மீது, அவருக்கு ஏதோ ஆத்திரமும் அதிருப்தியும் இருக்கின்றன என்பதை சுட்டாமல் சுட்டிக் காட்டுகிறது.

குறிப்பிட்ட ஒருவரிடமிருந்து எதையோ எதிர் பார்த்து, அது கிடைக்கப் பெறாததினால் ஏமாற்றம் பெற்று, அந்த ஏமாற்றத்தின் விளைவாக எரிச்சல் அடைந்து, தன்னை ஏமாற்றினவர்களைத் தக்க காரணமிருந்தாலும் இல்லாமற் போனாலும் மனம்போனபடி தாக்கியும், அவசியம் ஏற்பட்டால் வெளிப்படையாகத் தாக்கியும் வரும் ஏமாற்றம் பெற்றுள்ளவர் நிலைக்கு, சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் வந்திருக்கிறார். இவ்வாறு கொள்வதுதான் பொருந்தக் கூடியது என, ஆச்சாரியார் அரசியலின் ஏற்றமும், வீழ்ச்சியும் நமக்கு அறிவித்தவண்ணம் உள்ளது.

க்ஷயரோகத்தைப் போக்குவதற்கு வன்மை மிக்க மருந்து இதுவரை கண்டுபிடிக்கப்பட்டு விட்டதாகக் கூறுவதற்கில்லை. கூடுமானவரை நோயைக் கட்டுப்படுத்துகிறது, அல்லது குறைத்து வருகிறது, அல்லது வேகத்தை தணியச் செய்கிறது என்ற போக்கில்தான் இதுவரை வந்துள்ள மருந்துகளின் தன்மை இருக்கிறது.

அத்தகு பயங்கரமான க்ஷயரோகத்திற்கு இலகுவாக ஒருவர் பலியாகாமலிருக்க, பி. சி. ஜி. எனக் கூறப்படும் க்ஷயரோகத் தடுப்பு ஊசி, சிறுவர் சிறுமியர்களுக்குக் குத்தப்பட்டு வருகிறது. இந்தத் தடுப்பு ஊசி குத்துவது சில நாடுகளில் கட்டாயப்படுத்தப் பட்டும் இருக்கிறது.

ஆச்சாரியார் முதலமைச்சராக இருந்த காலத்திலும், இம்மாநிலத்தில் பி. சி. ஜி. ஊசி சிறுவர்களுக்குக் குத்தப்பட்டது. அப்பொழுது, அதைத் தடுக்காமல் ஆச்சாரியார் அனுமதித்தே வந்திருக்கிறார்.

அன்று வாய்மூடி இருந்து விட்ட அவர், இன்று பி. சி. ஜி. ஊசி குத்துவதை எதிர்த்துப் போர்தொடுக்கக் கிளம்பியுள்ளார். அவருடைய 'பொருளறிவு இல்லாத, போலி வாதங்களை, பொறுப்புள்ள—பொருளறிவு படைத்த மருத்துவ நிபுணர்கள் காரசாரமாகக் கண்டிக்கின்றனர். அவரோ திருந்தவில்லை; தன் அறியாமையைக் காட்டிக்கொள்வதைக் கைவிட அவர் விரும்பவுமில்லை!

பி. சி. ஜி. ஊசிக்கு எதிராகத் தான் தொடுத்துள்ள போருக்கு எடுத்துக்காட்டாக, கோவையில் கண்ணிழந்த ஒரு சிறுமியின் கதையையும் குறிப்பிட்டார்.

அந்தச் சிறுமிக்கு பி. சி. ஜி. ஊசி குத்தின சில நாளைக்குப் பிறகு அம்மை போட்டதாகவும், அதனால் கண்பார்வை போய்விட்டதாகவும் சொல்லப்படுகிறது. பி. சி. ஜி. ஊசி போட்டதின் விளைவாகத்தான் சிறுமியின் கண் போய்விட்டது என ஆச்சாரியார் சாற்றுகிறார். சிறுமிக்குக் கண்ட அம்மை நோயின் காரணமாகத் தான் பார்வை பழுதாகிவிட்டது என மருத்துவர்கள் கூறுகின்றனர்.

அது பற்றி ஆராய்ந்து அறிய சென்னை அரசாங்கம் மூவடங்கிய ஒரு மருத்துவ நிபுணர் குழுவை நியமித்திருக்கிறது.

அது பற்றி ஆச்சாரியார் தனது கருத்தை அறிவிக்கும் பொழுது, அரசாங்கத்தால் நியமிக்கப்படும் 'நிபுணர் குழு' விவகாரத்தையே ஒரு ஏமாற்று வித்தை எனப் பொருள்படும்படி கேலி செய்துள்ளார்.

சிறுமியின் கண் பார்வை போனதற்கும் பி. சி. ஜி. ஊசிக்கும் சம்பந்தமில்லை; அம்மை போட்டதின் விளைவாகத்தான் சிறுமியின் பார்வை போய்விட்டது என அரசாங்கம் கூறுகிறது. அந்த அரசாங்கக் கூற்றை அப்படியே ஒப்புக்கொண்டு ஒரு முடிவைக் கூற வேண்டும் என்ற உள்நோக்கத்துடன்தான் அரசாங்கம் நிபுணர் குழுவை நியமித்திருக்கிறது என ஆச்சாரியார் கூறுகிறார்.

தனது கூற்றை வலியுறுத்தும் வகையில்தான் நிபுணர்கள் முடிவு இருக்க வேண்டும் எனதான் எதிர்பார்ப்பதுபோல், வேறு வகைகளில் நிபுணர் குழுவிற்கு தூண்டுதல் தந்திருப்பதாகவும் நிபுணர் குழு அமைப்பு பற்றிய தனது பொதுக் கருத்தை, ஆச்சாரியார் அறிவித்தும் உள்ளார்.

'தஞ்சை மாவட்டத்தில் பி. சி. ஜி. ஊசி குத்தும் ஏற்பாட்டைத் தீவிரமாக்க வேண்டும்' என சுகாதார மந்திரி அறிவித்திருக்கும்பொழுது, 'அச்சிறுமி பற்றி பயன்தரும் விசாரணைக்கு எங்கே வாய்ப்பு இருக்கிறது? நம்பிக்கையான தீர்ப்புக்கும் இடமேது?' என ஆச்சாரியார் நிபுணர் குழு நியமிக்கும் அரசாங்கத்தின் பொதுப் போக்கையே, நையாண்டி செய்திருக்கிறார்.

பாம்பின் கால் பாம்பு அறியும்! 'நிபுணர் குழு' நியமன விஷயங்களில் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் கொண்டுள்ள மனப்போக்கை, ஆட்சி அனுபவம் பெற்றுள்ள ஆச்சாரியார் நன்கு அறியாமல் இருக்க நியாயமில்லை. தனது அரசியல் கூட்டுத் தோழர்களின் அந்தரங்கத்தை இதுவரை வெளியிடாது பேசா மடந்தையாக இருந்துவந்த ஆச்சாரியார், இப்பொழுது வெளியிட முன் வந்திருப்பதிலும் விசேஷம் ஏதாவது இருக்குமா என்பதும் சிந்திக்கத்தக்கதேயாகும்.

தனது புதுக் கல்வித் திட்டத்தின் நன்மை தீமைகளை ஆராய்ந்தறிய பாருலேகர் தலைமையில் ஒரு குழுவை ஆச்சாரியார், அமைச்சராக இருந்த பொழுது நியமித்தார். நிபுணர் குழு நியமனம் குறித்து ஆச்சாரியார் கூற்றின்படி பார்த்தால், அமைச்சர் ஆச்சாரியாரால் நியமிக்கப்பட்ட பாருலேகர் குழுவும் ஆச்சாரியார் விரும்பிய முடிவைக் கூறுவதற்கே என்பது விளக்கமாகிறது. அந்தச் சொந்த அனுபவத்தைக் கொண்டுதான், நிபுணர் குழு நியமனம் பற்றி ஆச்சாரியார் இத்தகுக் கருத்தைக் கூறுகிறார் போலும்! எது எப்படி இருந்தாலும் ஆச்சாரியாரின் உண்மை அம்பலமாவது கண்டு, அதுவும் அவர் வாயுரையாலேயே வெளியாவது கண்டு அனைவரும் மகிழ்வர் என்பதில் ஐயமில்லை.

கைவிட்டுவிட்டனராம்

காகினடா, ஜூன் 10—

ஆந்திர சர்க்கார், மச்சேர்லா எனுமிடத்தில் நிறுவுவதாக இருந்த சிமெண்ட் தொழிற்சாலைத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டதாயும், அந்த தொழிற்சாலையை சர்க்கார் நிறுவி நடத்துவது, இலாபகரமாயிராது என்ற காரணத்தினாலேயே திட்டத்தைக் கைவிட்டதாயும் ஆந்திர மாநில திட்ட இலாகா மந்திரி காளா வெங்கட்ராவ் கூறியிருக்கிறார்.

ஆசியாவின் பழத் தோட்டம்!

வட நாட்டில் உருவாகுகிறது

ஆரோக்கியம் மிகுந்த கோமான் பகுதியின் பொருளாதாரப் பிரச்சினைக்கு பரிகாரம் தேடுவதில் உ. பி. சர்க்கார் தீவிரமாயிருக்கின்றனராம்.

18,800 சதுர மைல் பரப்பளவுள்ள இந்தப் பகுதியில் 21.6 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். இந்தப் பகுதி, என்றாவது ஒருநாள் ஆசியாவின் பழத் தோட்டமாக விளங்கப் போகிறது என்ற வகையில் அதன் அபிவிருத்தி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

கோமான் பகுதியில் விவசாயம் செய்யப்படும் நிலப்பரப்பில் 10 சதவிகிதம்—சுமார் 28,000 ஏக்கர் நிலம்—பழ மரங்கள் நிறைந்து விளங்கும். எஞ்சியவற்றில் உணவுப் பொருள் பயிரிடப்படுகின்றது.

இப்போது உணவு பயிரிடப்படும் பகுதி அளவு பழ வகை மரங்கள் பயிரிடுவது மிக லாபகரமானதாயிருக்கும் என்று கூறப்படுகிறது.

அப்படிச் செய்தால், 10 ஆண்டுகளில் 10 மடங்கு பலன் எதிர் பார்க்கலாம் என்று, சர்க்கார் அதிகாரிகள் கருதுகின்றனராம்.

ராம்கர் எனுமிடத்தில் உள்ள பழவகை பாடம் செய்யும் தொழிற்சாலை வேகமான வளர்ச்சி பெற்று வருகிறதாம்.

மணிக்கு 1,000 பவுண்டு பழக்குழம்பும், 12,000 பவுண்டு, பழரசமும் உற்பத்தி செய்வதற்கென்ற ஏற்பாடுகள் தொழிலகத்தில் உண்டாம்.

சர்க்காரின் இந்தத் தொழிற்சாலை உற்பத்தி துவக்கினால், 'ஜாம்', ஊறுகாய் போன்ற தயாரிப்புகளில் ஈடுபட்டிருக்கும் உற்பத்தியாளர்கள், பாதிக்கப்படுவார்களாம்.

கோமான் பகுதியில், பழ உற்பத்தி லட்சிய எல்லையை அடையும்போது, ரூ. 2.6 லட்சம் செலவில் ராம்கரில் நிறுவப்படுவது போன்ற நான்கு பழ வகைப் பொருள்கள் உற்பத்திக்கான நிலயங்கள் தேவைப்படும் என்றும் கூறப்படுகிறது.

சமஸ்கிருத மொழியை எல்லோரும் கற்றுக்கொள்ள வேண்டுமாம்

பீகார் கவர்னர் திவாகரின் கூற்று

பெங்களூர், ஜூன் 9—

"சமஸ்கிருதம் நமது சிறந்த மொழி; எல்லோரும் வகுப்பு,சாதி, பால் வேறுபாடின்றி அதனைக் கற்குமாறு ஊக்குவிக்க வேண்டும்.

"மக்கள் சமஸ்கிருதத்தைப் பற்றி ஆர்வங்கொள்ளும் வகையில், உச்சரிப்புகளை சுலபப்படுத்துதல் போன்ற சில உபாயங்களைக் கண்டு பிடித்தாக வேண்டும்;

"சமஸ்கிருதம் மதசம்பந்தமான காரியங்களுக்குமட்டுமே உபயோகப்படக்கூடும் என்ற ஒரு தவறான கருத்து நிலவுகிறது;

"அரோப சாஸ்திரம், ஆயுர்வேதம், சாமம், நடுவ, சிற்ப சாஸ்திரங்கள் போன்றவை சமஸ்கிருதத்தில் இருக்கின்றன என்பதை மக்கள் உணருமாறு செய்வதின் மூலம், அந்தத் தவறான எண்ணத்தைத் திருத்தவேண்டும்;

"சமஸ்கிருதம் பரவுவதற்கு முதலில் நாட்டு மக்கள் அனைவரும், அந்த மொழி, தங்கள் மொழி என்பதை உணருமாறு செய்யவேண்டும். அது எல்லோராலும் பயிலப் படவேண்டும்;

"'காயத்ரி' படிப்பதற்கு ஒரு பெண்ணையோ, பார்ப்பனரல்லாதாரையோ கூடாது என்று தடுத்துவிட்டு, சமஸ்கிருதம், அவர்கள் மொழி தான் என்பதை எப்படி உணரச் செய்ய முடியும்?"

என்று, பீகார் மாநில கவர்னரான ஆர். ஆர். திவாகர், மைசூரில் சமஸ்கிருத விழா ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

லண்டனில்

முன்னாள் போர் வீரர் கூட்டம்

சென்ற 6—6—55ல், லண்டனில், காமன்வெல்த் ஹவுஸ் மந்திரி ஹோம் பிரபு, பிரிட்டிஷ் எம்பயர் சர்வீஸ் லீகின் பதின்மூன்றாவது மாநாட்டைத் திறந்து வைத்திருக்கிறார். காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த முன்னாள் போர் வீரர்களின் சங்கம்தான் இந்த சர்வீஸ் லீக் என்றும், இரண்டாண்டுகளுக்கொருமுறை இந்த லீகின் மாநாடு கூடுமென்றும் தெரிகிறது. 39 நாடுகளின் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

இந்தியாவின் முன்னாள் வைசிராயாக இருந்த மவுண்ட் பாட்டன் பிரபுதான் இந்தச் சங்கத்தின் தலைவராம்.

பெண் சாரணர்கள் மாநாடு

லண்டன், ஜூன் 8—

பெண் சாரணர்கள் சங்கத்தின் வருடாந்திர மாநாடு, இன்று லண்டனில் தூயஜேம்ஸ் மாளிகையில் நடைபெற்றது. சென்னையைச் சேர்ந்த குமாரி வேதநாயகம், அசாமைச் சேர்ந்த திருமதி தத்; அலகாபாதைச் சேர்ந்த திருமதி மோஹினி ஆகியவர்கள் மேற்படி மாநாட்டில் கலந்துகொண்டனர்.

சுவிட்சர்லாந்தில் நடந்த சர்வதேச பெண் சாரணர் படை பயிற்சி முகாமில் குமாரி வேதநாயகமும், திருமதி மோஹினியும் கலந்துகொண்டு லண்டனுக்குச் செல்கிறார்கள்.

பிச்சைக்காரர் பிரச்சினை தீர:

ரூ. 10,000 செலவில் திட்டம்!

புதுடில்லி, ஜூன் 10—

சென்னை நகரத்திலுள்ள பிச்சைக்காரர்களின் பிரச்சினையைச் சமாளிப்பதற்கு, சென்னை சமூகப் பள்ளி தயாரித்திருந்த ஒரு திட்டத்தை திட்டக்குழு அங்கீகரித்துள்ளதாம். இத்திட்டம் ரூ 10,000 செலவில் தயாரிக்கப்பட்டுள்ளதாம்.

அட்லி மீண்டும் தொழிற்கட்சித் தலைவரானார்

லண்டன், ஜூன் 10—

இங்கிலாந்து மக்கள் சபையின் சோஷலிஸ்டு அங்கத்தினர்கள், மக்கள் சபை தொழிற் கட்சித் தலைவராக மீண்டும் க்ளெமெண்ட் அட்லியைத் தேர்ந்தெடுத்தனர்.

வந்திருந்த 227 அங்கத்தினர்களும் அட்லியையே ஒரு முகமாகத் தலைவராக ஏற்றுக்கொண்டனர் எனத் தெரிகிறது.

72 வயதான அட்லி தொடர்ந்து தலைவராக இருக்கமாட்டாரெனவும், அவர் தலைமைப் பதவியை ஒரு, 'இளைஞரி'டம் தந்துவிட உத்தேசித்திருப்பதாகவும் பரவலாகச் செய்திகள் வந்துகொண்டிருந்தன.

இன்று ராணி துவக்கி வைத்திருக்கும் மக்கள் சபைக் கூட்டம் முடியும் வரையிலேனும் அவர் தலைவராக இருப்பார் என்றும், இன்னும் கொஞ்ச நாள் தலைவராயிருக்க அவர் சம்மதித்ததாயும் கூறப்படுகிறது.

2-வது ஐந்தாண்டுத் திட்டத்தில்

சாலே அபிவிருத்திக்கு ரூ. 93 கோடி ஒதுக்கப்படும்

இராணிப்பேட்டை பாலாற்றுப் பாலத் திறப்பு விழாவில் மத்திய அமைச்சர் தகவல்

தேசிய முக்கிய சாலேகளுக்காகவும், மாநில இணைப்புச் சாலேகள்—பொருளாதார முக்கியத்துவம் பெற்ற சாலேகளுக்காகவும் முறையே ரூ 60 கோடியும், ரூ 33 கோடியும் செலவிடுவதற்கான யோசனைகள் மத்திய சர்க்கார் பரிசிலனையிலிருந்துவருகின்றன.

மேற்கண்ட இத்தகவலே இராணிப்பேட்டையில், பாலாற்றின் மீது கட்டப்பட இருக்கும் பாலத்தின் அஸ்திவாரக் கல்நாட்டு விழாவின்போது மத்திய சர்க்கார் துணை போக்குவரத்து, இரயில் அமைச்சர் ஓ. வி. அளகேசன் தெரிவித்திருக்கிருர்.

இப்பாலம் கட்டுவதற்கான யோசனையை சென்னை சர்க்கார் 1951-ம் ஆண்டிலேயே தெரிவித்திருந்தார்கள் என்றும், ஆயினும் அப்போதிருந்த நிதிக் கஷ்டத்தின் காரணமாக அத்திட்டம் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் மேலும் கூறியிருக்கிருர்.

மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டார் :—

"தேசீய முக்கியச் சாலேகள் சம்மந்தப்பட்ட மட்டில், இரண்டாவது திட்டக் காலத்திற்குள் இவ்விணைப்பிலுள்ள இடைவெளிகள் அனைத்தும் சரிக்கட்டப்பட்டு நாடு முழுமையிலும் ஒருங்கு சேர்க்கப்பட்ட சாலேகளுக்கான ஏற்பாடு முடிவடைய வேண்டுமென்பதே எங்கள் அவா ; தேசீய முக்கியச சாலேகளில் எல்லா பருவகாலங்களிலும் போக்குவரத்து நடைபெறுவதற்கு அனுகூலமாகத் தேவையான இடங்களிலெல்லாம் பாலங்கள் கட்டி முடிக்கவும் நாங்கள் விரும்புகிருேம். மற்றும் தேசிய முக்கியச் சாலேகளில் சேர்க்கப்படும் எல்லா சாலேகளும் 'தார்' போடப்பட்டவையாக இருக்கவும் திட்டமிட்டுள்ளோம்."

நடப்பு ஐந்தாண்டுத்திட்டத்தில், தேசிய முக்கியச் சாலேகள் சம்மந்தப்பட்ட மட்டில் ரூ. 5¼ கோடி செலவாகக்கூடும் என மதிப்பிடப்பட்டுள்ள திட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள திட்ட காலத்திற்குள் 1,250 மைல் தொலேவிற்கு இணைப்புச் சாலேகள் போடவும், புதியதாக 75 பெரிய பாலங்கள் கட்டவும், ஏற்கனவே உள்ள சாலேயில் 6,000 கல் நீளத்திற்கு சீர்படுத்தும் வேலே நடத்தவும் திட்டமிடப்பட்டிருக்கிறது

நடப்பு இரண்டாவது திட்டக் காலத்தில் சென்னை மாநிலத்தைப் பொறுத்த மட்டில் உள்ள தேசிய முக்கிய சாலேகளுக்காக மட்டும் ரூ 205 லட்சம் மதிப்புடைய வேலேத் திட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. ரூ. 184 லட்சம் மதிப்பிற்கான வேலேகள் நடைபெற ஏற்கனவே அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட தகவல்களேயும் அவர் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்திருக்கிருர்.

பின்னர், மாநில உயர் நீதிமன்ற பிரதம எஞ்சினியர் கே கே. நம்பியார், பாலாற்றுப் பாலம் குறித்துப் பேசுகையில், பாலம் மொத்தம் 1,974 அடி நீளம் உடையதாகவும், 60 அங்குல நீளத்தில் 30 வளேவுகள் கொண்டதாகவும் இருக்குமென்றும், அதற்காகும் செலவு ரூ 19¾ லட்சம் என்றும், மேற்படி பாலம் கட்டி முடிக்க 2,520 டன் சிமெண்டும், 735 டன் உருக்கும் தேவைப்படும் என்றும் தெரிவித்திருக்கிருர்.

பாலாற்று நீர்த்தகராறு

அழகேசனிடம் பக்தவத்சலம் முறையிடு

"பாலாற்றுத் தண்ணீரைப் பகிர்ந்துகொள்ளும் பிரச்சினேக்குப் பரிகாரம் காண்பதில் மத்திய சர்க்கார் போக்குவரத்து, ரயில்வே உதவி மந்திரி ஓ வி. அளகேசன் தமது செல்வாக்கை உபயோகித்தால், அவர், இந்தப் பாலத்தைப் பயனுள்ளதாகச் செய்தவராவார் இந்தப் பிரச்சினேயைத் 'திருப்திகர'மானதாகச் செய்து தீர்ப்பதில் இந்த மாவட்டத்திலுள்ள மக்களும், நானும், மாநில சர்க்காரும் எல்லாவித முயர்சிகளும் செய்து வருகிருேம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லே. உதவி அமைச்சரின் உதவி தற்போது பெரிதும் வரவேற்கப்படுகிறது."

இவ்வாறு, இராணிப்பேட்டையில், பாலாறு நதியின் மீது கட்டப்பட இருக்கும் பாலத்திற்கு அஸ்திவாரக் கல் நாட்டு விழாவின் போது சென்னை மாநில நிலவரி அமைச்சர் மாணிக்கவேலர் கூறியிருக்கிருர்.

"கிராம அபிவிருத்தி வேலேகளே மேற்கொள்வதில் சர்க்கார் தயக்கம் எதுவும் காட்டவில்லே; தேசிய விரிவுபடுத்தும் திட்டம் தவிர, கிராமக் குடிதண்ணீர் வசதிக்காக இவ்வாண்டில் ரூ. 1 கோடி செலவிடப்படும்; இட அபிவிருத்தி வேலேகளுக்காக மேலும் 1 கோடி ரூபாய் செலவிடப்படும்," என்றும் அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

தமிழ் நாட்டு மக்கள் சபை

உறுப்பினர்கள் விவாதிப்பர்

சென்னை, ஜூன் 10—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் குறித்து சில தமிழ் நாட்டு மக்கள் சபை உறுப்பினர்களுடன் சென்ற வாரம் காரைக்குடியில் தாம் விவாதித்ததாக, காங்கிரஸ் தலேவர் பி. கக்கன் கூறியிருக்கிருர்.

சீக்கிரமே தமிழ் நாட்டைச் சேர்ந்த எல்லா மக்கள் சபை உறுப்பினர்களுடனும், சென்னை அரசாங்கம் இரண்டாம் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்காக சிபாரிசு செய்துள்ள திட்டங்கள் பற்றி விவாதிப்பதற்கு ஏற்பாடுகள் செய்வதென தாம் எண்ணியிருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிருர்.

அப்போது சென்னை மாநிலத்தில் கனரகத் தொழில்கள் நிறுவ வேண்டுமென்பதை இந்தியப் பேரரசிடம் வர்புறுத்த வேண்டியதின் அவசியங் குறித்தும் விவாதிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

சென்னை நகரசபை கோரிக்கை!

சர்க்கார் நிராகரித்தனர்!

சென்னை நகரசபையினர் நடத்திவரும் நடுநிலேப் பள்ளிகளுக்கு போதனு மானியமும், ஊதிய வருமான நஷ்டத்திற்கு நஷ்டஈடும் தரவேண்டுமென்று சென்னை நகரசபையினர் கேட்டுக் கொண்டிருந்த கோரிக்கையை சென்னை சர்க்கார் நிராகரித்துவிட்டனராம்.

சென்னை நகரில், நகரசபையினர் இரண்டு நடுநிலேப்பள்ளிகளே நடத்திவருகின்றனர். இவ்விரண்டு பள்ளிகளுக்கும் ஆண்டொன்றில் நகரசபையினர் ரூ 2 இலட்சம் செலவிடுவதாகவும், போதனு மானியம், ஊதிய வருமான நஷ்டம் ஆகிய இரண்டும் சேர்ந்து ஆண்டொன்றில் ஒரு இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படுவதாகவும் நகரசபையில் குறிப்பிட்டிருந்தனராம்.

நிலச் சீர்திருத்தம் பற்றி சென்னை சர்க்காரின் இரகசிய திட்டங்கள்

திட்டக் குழுவின் பரிசீலனேக்கு அனுப்பப்படுமாம்!

சென்னை, ஜூன் 10—

சென்னை மாநிலத்தில் நிலச் சீர்திருத்தம் பற்றி, சென்னை மந்திரி சபையின் துணைக் குழு செய்திருந்த சிபாரிசுகளின் பொதுவான கொள்கைகள் சென்னை அமைச்சரவைக் கூட்டத்தின் போது அங்கீகரிக்கப்பட்டுவிட்டன என்று தெரிய வருகிறது.

இனிமேல் இந்தச் சிபாரிசுகள் திட்டக் குழுவிற்கு அனுப்பப்படும் என்றும், திட்டக் குழுவின் கருத்தையும் தெரிந்துகொண்டான பின்னர்தான் அவை மசோதாவாக உருவாக்கப்பட முடியும் என்றும் கூறப்படுகிறது.

"திட்டக் குழு விதித்துள்ள கொள்கைகளேயொட்டியே சென்னையின் சிபாரிசுகள் இருக்கும்" என்று சென்னைமாநில முதலமைச்சர் காமராசர் கூறியிருக்கிருர்.

இந்தச் சிபாரிசுகள் திட்டக் குழுவின் பரிசீலனேக்கெடுத்துக் கொள்ளப்பட்டு, அதன் பின்னர் தான் மசோதாவாக்கப் படுமானல், சற்று காலதாமதமாவதை தவிர்க்க முடியாது என்றும், திட்டக் குழுவின் கருத்தையறிந்து மசோதா முடிவாகத் தயாரிக்கப்பட்ட பின்னரே அது பிரசுரிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

சர்க்காரின் சிபாரிசுகள் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள முடியாத அளவிற்கு அவைகள் இரகசியமாக இருந்து வருகின்றனவாம்!

மந்திரி சபை மட்டும் அறியும் ரகசியம்

சென்னை, ஜூன் 9—

"என்னிடமிருந்து நேற்று ஒரு விஷயம் வெளியாகிவிட்டது. ஒரு உபகுழுவிற்கு மட்டுமே தெரிந்திருந்த ரகசியம் இப்போது மந்திரி சபைக்குத் தெரிந்த ரகசியமாகிவிட்டது ருசிகர நிகழ்ச்சிகளே உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் எனக்கு விருப்பந்தானென்றாலும் நான் இப்போது எதும் சொல்வதற்கில்லே" என்று ரெவினியூ மந்திரி மாணிக்கவேலர், பத்திரிகையாளர்களிடம் தெரிவித்திருக்கிருர்.

பத்திரிகையாளர், மந்திரி சபையிலிருந்து நான்கு பேர் கொண்டு நியமிக்கப்பட்ட உப குழு நிலச் சீர்திருத்தம் பற்றித் தயாரித்திருக்கிற திட்டம் குறித்து விளக்கம் கேட்டபோதுதான் மந்திரி அவ்விதம் கூறியிருக்கிருர்.

"தனிப்பட்டவர்கள் இவ்வளவு தான் நிலம் படைத்திருக்கலாம் என்ற நிர்ணயத்திற்கு எந்த மந்திரியாவது உட்படுகிருரா ?" என்று கேட்டபோது, "இப்படிக் கேட்டு விஷயத்தைக் கறக்கப் பார்க்கிறீர்களா? இந்த நிலச் சீர்திருத்தச் சட்டப்படி எந்த மந்திரியும் பாதிக்கப்படமாட்டார்" என்று தெரிவித்திருக்கிருர்.

பாரசீகத்திற்கு சோவியத்தங்கம்

தெஹ்ரான், ஜூன் 9—

சென்ற வாரம், ஜல்பா எனும் எல்லேப் பகுதியில் வைத்து, சோவியத் ரஷ்யா, பாரசீகத்திடம் ஒப்படைத்த இரும்பு பெட்டிகளில் அடைக்கப்பட்ட 11 டன் தங்கமும் இங்கு பத்திரமாக வந்து சேர்ந்ததாக அறிவிக்கப்படுகிறது.

இந்த 11 டன் தங்கமும் பாரசீக தேசிய பாங்கியில் இருக்கும் என்றும், இதன் மதிப்பு சுமார் 5 கோடி ரூபாய் என்றும் தெரிகிறது. இப்போது ரஷ்யா, யுத்தகால கடன்களுக்கு பாரசீகத்திற்கு 11 டன் தங்கத்தை தந்துவிட்டதினுல், இரு நாடுகளுக்குமிடையே, யுத்த காலக் கோரிக்கைகளுக்காக இருந்த தகராறு தீர்ந்து வருகிறது எனக் கூறப்படுகிறது.

மாநில புனரமைப்புக் குழு

அலுவல்களின் விவரங்கள்

மாநில புனரமைப்பிற்காக நியமிக்கப்பட்ட மூன்று பேரடங்கிய குழு, சுமார் 1,40,000, மனுக்களே பல்வேறு அரசியல், காலாச்சார, மொழி நிறுவனங்களிடமிருந்தும் பெற்றிருப்பதாகத் தெரிகிறது.

குழுவினரை 8,943 பேர் சந்தித்திருக்கின்றனர்.

கடந்த ஆண்டு மார்ச் 1-ந் தேதியன்று டெல்லியில் வேலே துவங்கிய குழுவினர், 24 மாநிலங்களில் உள்ள 100 இடங்களுக்கு இதுவரை சென்றிருக்கின்றனர்.

குழுவினர் 36,437 மைல்கள் சுற்றுப்பயணம் செய்திருக்கின்றனர்.

அவர்கள் தங்கள் அறிக்கையை வரும் செப்டம்பர் 30-ந் தேதிக்குள் இந்தியப் பேரரசிடம் தாக்கல் செய்வதாகத் தெரிவித்திருக்கின்றனர்.

அவர்களிடம் அறிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் கீழ்க்கண்ட வகையிலிருக்கலாம் என யூகிக்கப்படுகிறது :—

(1) இந்தியாவை மொழிவாரி மாநிலங்களாக உடனடியாகப் பிரிக்க வேண்டும்; ஐதராபாத் மாநிலத்தைத் துண்டாட வேண்டும் ; அப்போதுதான் பிரதேச மொழிக்கும், கலாச்சாரத்திற்கும் வளர்ச்சி ஏற்பட முடியும்.

(2) மொழிவாரியாக இந்தியாவைப் பிரிக்கக்கூடாது; அப்படிச் செய்தால் குறுகிய மனப்பான்மை வளர்ந்து, ஐக்கிய இந்தியாவின் வளர்ச்சி தடைப்படும்.

(3) அபிவிருத்தித் திட்டங்களில் நாடு கவனம் செலுத்திக் கொண்டிருப்பதால், இந்தப் பிரச்னேயையே ஒத்திப் போட வேண்டும்.

(4) மாநில அளவைப் பொருட்படுத்தாது, தென்னுட்டில் ஒவ்வொரு மொழிக்கும் ஒரு மாநிலம் அமைப்பது, அதாவது விசாலாந்திரம், சம்யுக்த மகாராஷ்டிரம், ஐக்கிய கர்நாடகம் என்று அமைப்பது, இன்னும் இரண்டு ஆந்திரம், இரண்டு கர்நாடகம், இரண்டு மராத்தி மாநிலங்கள் அமைய வேண்டும்; ஏனெனில் அவை மிகப் பெரிய மாநிலங்களாய் அமையுமாதலால் நிர்வாகம் செய்வது கடினமாயிருக்கும் என்று கருதப்படுவதாயும் தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

சிறு தொழில்கள் அபிவிருத்திக்கு

பல நோக்கு சேவா நிலேயங்கள்

பம்பாய், ஜூன் 9—

இந்தியா முழுவதிலும், சிறு தொழில்களின் அபிவிருத்திக்காக அமைக்கப்படும் பல நோக்குப் பிராந்திய சர்வீஸ் நிலேயங்கள் இன்னும் இரண்டு மாதங்களில் இயங்க ஆரம்பித்துவிடுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிலேயங்கள் மதுரை, பம்பாய், கல்கத்தா, பரீதாபாத் ஆகிய நான்கு இடங்களில் நிறுவப்படும் என்றும், மற்றும் நான்கு இடங்களில் இவற்றின் கிளேகள் இருக்குமென்றும், இவற்றை மத்திய சர்க்கார் கட்டி முடிக்குமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

இந்த நிலேயங்கள், உற்பத்தி முறைகளே திறமையுடையதாகச் செய்யவும், அவற்றில் புதிய உபகரணங்களே உட்புகுத்தவும், தொழில் நுணுக்க ஊழியரைத் தயாரிக்கவும், சிறு தொழில்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கு மார்க்கெட் கண்டுபிடிக்கவும் பணியாற்ற முன்வருமாம்.

மோட்டார் 'வான்'களுடனும், மாதிரி 'ஒர்க் ஷாப்'புகளுடனும் இயங்க ஆரம்பிக்கும் இத்தொழிற்சாலேகள் தச்சு, கருமார் வேலேகளில் முதல் கவனம் செலுத்தியும், பின்னர் மண்பாண்டம், பீங்கான், தோல், எஞ்சினீயரிங், இராசாயன தொழில்களில் கவனம் செலுத்தியும் வேலே செய்யுமாம்.

ஒவ்வொரு நிலேயத்திற்கும் ஒரு டைரக்டர், 5 துணை டைரக்டர்கள், 10 உதவி டைரக்டர்கள், 16 பீல்ட் இன்ஸ்ட்ரக்டர்கள், மற்றும் இதர ஊழியர்களும் நியமிக்கப்படுவாராம்.

மாநில சர்க்கார் உத்தியோகங்கள்

பிற மாநிலத்தவருக்கும் கிடைக்க மத்திய சர்க்காரின் புதிய சட்டம்

ஒரு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், மற்றொரு மாநில சர்க்காரின் காரியாலயங்களில் பணியாற்றத் தடை கூடாது என்று விதி ஏற்படுத்துவது சம்மந்தமாக, அடுத்த பாராளுமன்றக் கூட்டத்தின்போது, மத்திய சர்க்கார் சட்டம் ஒன்று தொண்டுவர இருக்கிருர்களாம்.

தற்போது நடைமுறையில் ஒவ்வொரு மாநில சர்க்காரும் விதித்துள்ள குடியிருப்பு யோக்கியதாம்சத்தின்படி, ஒரு மாநிலத்தைச் சேர்ந்தவர் மற்றொரு மாநில சர்க்காரின்கீழ் அந்தசர்க்கார் காரியாலயங்களில் உத்தியோகம் பெற முடியாது.

ஆனல் இந்திய அரசியல் சட்டம், 'வேரொரு மாநிலத்தைச் சேர்ந்தவர் என்ற காரணத்தால், மற்ற எந்த மாநில சர்க்காரிலும் ஒருவர் உத்தியோகம் பெறக் கூடாதென்று பாரபட்சம் காட்டப்படக் கூடாது' என்று கூறுகிறது. எனவே, அரசியல்சட்டம், 16-வது பிரிவின்படி கண்டுள்ள மேற்படி சட்டத்தின்படி, அச்சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமென்பதே தற்போது கொண்டுவரப்பட இருக்கும் புதிய சட்டத்தின் நோக்கமாம்.

கைதிகளுக்கு நூற்புக் கலேப் பயிற்சியாம்!

ரூ. 30,300-க்கு மாநில சர்க்கார் திட்டம்

பம்பாய், ஜூன் 10—

சென்னை மாநிலத்திலுள்ள 6 முக்கிய சிறைகளில், கைதிகளுக்கு நூற்புக் கலேப் பயிற்சி அளிக்க சென்னை சர்க்கார் முடிவு செய்துள்ளதாக அகில இந்திய கதர், கிராமக் கைத்தொழில் குழுவின் அறிக்கை ஒன்றில் காணப்படுகிறது. இத்திட்டத்திற்கு ரூ. 30,300 அனுமதிக்கப்பட்டுள்ளதாம்.

இத்திட்டம், வேலூர், சேலம், மதுரை, கோவை, கண்ணனூர், சென்னை ஆகிய இடங்களிலுள்ள சிறைகளில் அமுல் நடத்தப்படுமாம்.

ஒவ்வொரு சிறைக்கும் 25 கைராட்டைகள் அளிக்கப்படும் என்றும், சிறைகளில் நூற்கப்படும் நூல் அங்கேயே உபயோகப்படுத்திக் கொள்ளப்படுமென்றும், உபரியாக நூற்கப்படும் நூலே சர்க்கார் காதி நிலேயங்கள் வாங்கிக்கொள்ளும் என்றும் தெரிய வருகிறது.

இதற்குத் தேவைப்படும் பருத்தியையும் சிறைகளுக்குள்ளேயே உற்பத்தி செய்துகொள்ளும்படியும், இந்த உற்பத்திக்கு அந்தந்த சிறைகளில் உள்ள கைதிகளின் உழைப்பைச்செலவிடுமாறும் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

இத்திட்டம் முழுவதும் இலாப நஷ்டம் இல்லாத அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதாம்.

மாயூரம் தர்ம நிறுவனக் கல்லூரி

அண்ணாமலைநகர், ஜூன் 9—

மாயூரத்திலுள்ள அன்பனந்தபுரம் தர்ம நிறுவனக் கல்லூரியான ஏ. வி. ஸி. கல்லூரி, இத்திங்கள் 22-ந் தேதி முதல் வேலை செய்ய ஆரம்பிக்குமெனத் தெரிகிறது.

நிதி வசூல் நிகழ்ச்சிகளில் அண்ணா

★

'மக்கள் தீர்ப்பு' தந்த மாநில மாநாட்டு நிதி

11—6—55 மாலை 6-30 மணிக்கு, பல்லாவரம் சைவல்யம் படிப்பக நிதிக்காக கழகத் தோழர்களால் நடத்தப்பட்ட "மக்கள் தீர்ப்பு" என்ற நாடகம் சிறந்த முறையில் நடைபெற்றது. நாடகத்திற்கிடையில் தோழர் அருளழகன், அண்ணா அவர்களைத் தலைமை தாங்குமாறு கேட்டுக்கொண்டார்.

தோழர் அருளழகன், மாநில மாநாட்டுக்காக, பல்லாவரம் தி மு கழகச் சார்பில் ரூ 100 அண்ணாவிடம் அளித்தார்.

அதைப் பெற்றுக்கொண்டு அண்ணா அவர்கள், மாநில மாநாட்டுக்கு நிதி அளித்தமைக்கு நன்றி தெரிவித்தும், ஆர்வத்துடன் நாடகத்தில் நடித்தத் தோழர்களைப் பாராட்டியும், புராண இதிகாசங்களில் உள்ள முரண்பாட்டினை விளக்கியும், நல்ல கருத்துக்கள் பரவச் சீர்திருத்த நாடகங்கள் அவசியமானது என்பதை வலியுறுத்தும் நாடகத்திற்கு ஆதரவளிக்குமாறும் பேசினர்.

★

சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம்

சென்னை, ஜூன் 13—

12—6—55 காலை 10 மணிக்கு; சென்னை பூவிருந்தவல்லி தி. மு. க., கண்டோண்மெண்டு தி. மு. க, திருமழிசை தி. மு. க. ஆகியவற்றின் சார்பில், பூவிருந்தவல்லி 'விக்கினேஸ்வரர்' தியேட்டரில், செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் காஞ்சி தோழர் கே. டி எஸ் மணி அவர்கள் தலைமையில் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம் நடைபெற்றது. பெருந்திரளான மக்கள் வந்திருந்தனர். நகரின் முக்கிய வீதிகளும், தியேட்டர் முகப்பும் தி. மு. கழகக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. தலைவர் முன்னுரையாக தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கிக் கூறி, மாநில மாநாட்டுக்கு யாவரும் வரும்படியும், நல்லாதரவு தரும்படியும் கேட்டுக்கொண்டார்.

இசை முரசு நாகூர்-அனீபா இன்னிசை வழங்கினர்.

இரு திருமணங்கள்

தோழர் டி. சண்முகம் எம்.எல்.ஏ, அவர்கள், குன்றத்தூர் வாசிகளான தோழர் கிருஷ்ணன்—தோழியர் லெட்சுமி, தோழர் வரதன்—தோழியர் ஆண்டாள் ஆகியோர் திருமண நிகழ்ச்சியை இரண்டே நிமிடத்தில் நடத்தி வைத்தார். 'மணமக்கள் வாழ்க' என்று மக்கள் வாழ்த்தினர். மலர் மாலைகள் சூட்டிக்கொண்டு, மணமக்கள், யாவருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார்கள். மணமக்கள் சார்பில், 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 4 அன்பளிக்கப்பட்டது—பெற்றுக்கொண்டோம்—நன்றி.

பெயர் சூட்டல்

பொதுச் செயலாளர் இரா நெடுஞ்செழியன் அவர்களால், கழகத் தோழர் ஒருவரின் பெண் குழந்தைக்கு 'பூங்கோதை' என்று பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 வழங்கப்பட்டது—பெற்றுக்கொண்டோம் — நன்றியுரியது — பொறுப்பாளர்.

ஊராண்மைக் கழக வரவேற்பு

மூன்றன் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கட்கு பூவிருந்தவல்லி ஊராண்மைக் கழக சார்பில் வரவேற்புப் பத்திரம் வழங்கப்பட்டு மலர்மாலைகள் சூட்டப்பட்டது.

பூவிருந்தவல்லி, திருமழிசை, ஆவடி, குன்றத்தூர், மாங்காடு ஆகிய ஊர்களின் தி. மு கழகக் கிளைகளின் சார்பில் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டது.

திருச்சி மாநில மாநாட்டு நிதிக்காக பூவிருந்தவல்லி, திருமழிசை கண்டோன்மெண்டு கழகச் சார்பில் வசூல் செய்த தொகை ரூ 225-ம், ஆவடி தி. மு. கழகச் சார்பில் ரூ. 20-ம், செங்கற்பட்டு மாவட்டச் சார்பில் அண்ணா அவர்களிடம் தரப்பட்டது.

ஊராண்மைக் கழகத்தாருக்கும்; தி. மு. கழகத் தோழர்கட்கும் நன்றி கூறிய பின், அண்ணா அவர்கள் 'உலகைத் திருத்திய உத்தமர்கள்' என்ற தலைப்பில், சுமார் 1½ மணி நேரம் விரிவுரையாற்றினர்.

★

மாதவரம் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

சென்னையை அடுத்த மாதவரம் தி. மு கழகச் சார்பில் 12—6—55 மாலை ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு தோழர் எம். ஈ. பாண்டியன் தலைமை வகித்தார்.

தோழர்கள் இளம்பரிதி, ஏ. கே. சாமி எம். சி., அ. பொன்னம்பலனார் ஆகியோர் பேசியதும், அண்ணா அவர்கள் சீரியதோர் கருத்துரை வழங்கினர்.

அண்ணா அவர்களுக்கு பல மன்றங்கள், கழகங்கள் சார்பில் மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

மாநில மாநாட்டு நிதிக்காக, அண்ணா அவர்களிடம் ரூ. 100 தரப்பட்டது.

தலைவர் நன்றியுரையுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

கூட்டத்திற்கு சென்னையிலிருந்தும் சுற்றுப்புறங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்—அவ்வப்போது, அச்சுறுத்திக் கொண்டிருந்த மழையையும் பொருட்படுத்தாது!

பாக். அரசியல் நிர்ணய சபைத் தேர்தல்

முஸ்லிம் லீகில் பிளவும் பிணக்கும்

லாகூர், ஜூன் 11—

பாகிஸ்தான் பஞ்சாப் சட்டசபை முஸ்லீம் லீக் கட்சியின் கூட்டம் இன்று நடைபெற்றபோது, முன்னாள் முதன் மந்திரி பெரோஸ்கான் நூன், அவர் சக மந்திரி நவாப் முஜாபர் அலி ஆகியோரை அரசியல் நிர்ணய சபைத் தேர்தலுக்கு அபேட்சகர்களாகப் பொறுக்கி எடுக்கக் கூடாதென்று மத்திய பார்லிமெண்டரி போர்டைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டதாகத் தெரிகிறது.

சிந்து மாநில முஸ்லிம் லீக் கட்சியின் இரு போட்டி பார்லிமெண்டரி போர்டுகள், இன்று அ. நி. சபைத் தேர்தலுக்கு தங்கள் தங்கள் அபேட்சகர்களைத் தேர்ந்து எடுத்து அறிவித்திருக்கின்றனவாம்.

ஒன்று, முதன் மந்திரி குர்ரோ தலைமையிலும், மற்றொன்று, காஜி பஸ்லுல்லா தலைமையிலும் கூடியது. தலா 4 அபேட்சகர்களின் பெயர்களை மத்திய பார்லிமெண்டரி போர்டுக்கு சிபாரிசு செய்துள்ளனவாம்.

உரிமைக் கிளர்ச்சி: மேலும் பலர் கைது

அமிர்தசரஸ், ஜூன் 11—

மொழிவழி மாநிலம் கோரி உரிமைக் குரல் எழுப்புவதற்கு இங்கு விதிக்கப்பட்டுள்ள தடையை மீறியதற்காக மேலும் 59 அகாலிகளத்தவர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் எனத் தெரிகிறது.

'பிர்லா'க்கள் ஆதரவு.....

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

"இரும்பு, பழுக்கக் காய்ச்சப்பட்டிருக்கிறது—இன்று; அந்த இரும்பை சம்மட்டி கொண்டு அடித்தால், தேவையான வாள், வேல் கிடைக்கும்; பழுக்கக் காய்ந்துள்ள இரும்பு, சூடு தணியுமுன்பே சம்மட்டியால் அடிக்கப்பட்டால் தான், வேலும் வாளும் உருவாக்கப்பட முடியும்; சூடு தணிந்து விட்டால், மறுபடியும் ஒருமுறை இரும்பைக் காய்ச்ச வேண்டியிருக்கும். அதுபோல, இன்று, இந்த நாட்டு மக்களின் உள்ளத்தில் வடநாட்டு எதிர்ப்பு எண்ணம் உதயமாகியிருக்கிறது; பழுக்கக் காய்ந்துள்ள இரும்பை சம்மட்டி கொண்டு அடித்து தேவையான வாளும், வேலும் உருவாக்குவதுபோல், மக்களிடைத் தோன்றியுள்ள வடநாட்டு ஆதிக்க ஒழிப்பு எண்ணத்தை நாம் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்; வடநாட்டிலிருந்து திராவிடத்தை மீட்பதற்கு நல்ல பல திட்டங்கள் தீட்டவே மாநில மாநாடு நடைபெறப்போகிறது; அந்த மாநாட்டிற்கு நீங்கள் எல்லாம் உங்களாலியன்ற நிதி தரவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்,"

—என்று மாதவரம் தி. மு. கழகச் சார்பில் 12—6—55 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய நமது அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்

தொடர்ந்து பேசுகையில் அண்ணா அவர்கள் கூறினர்:—

"ரஷியாவுக்குச் சென்றிருக்கிறார் இன்று பண்டித நேரு; அங்கு அவர், மாம்பழம் அரிந்து கொடுக்கிறார் புல்கானினுக்கு; புல்கானின், ஆப்பிள் அறுத்துத் தருகிறார் நேருவுக்கு! இவர் ஒரு கையால் கைகுலுக்குகிறார்; அவர் இரண்டு கரங்களாலும் இவர் கையைப் பிடித்துக் குலுக்குகிறார்! இருந்தாலும், இத்தனை நேசமும், உறவும் கொண்டாடினாலும், 'இந்தியாவும் — ரஷியாவும் ஒன்றாக இணைந்துவிடும்,' என்றா கூறுகிறார்கள்? இல்லையே! 'இந்தியா வேறு—ரஷியா வேறு; இந்தியத் தலைவர் பண்டித நேரு—ரஷிய நாட்டின் தலைவர் புல்கானின்,' — என்று பிரித்துதானே இருக்கிறோம்?

"நாம், இந்த நேச அடிப்படையில்தான், திராவிட நாடு வேண்டுமென்கிறோம்; வடநாட்டவர் மீது நமக்கு வெறுப்பு இல்லை. 'வடநாட்டவர் வாழட்டும்—ஆளட்டும்—வடநாட்டிலேயே! தென்னாட்டை தென்னாட்டவரே ஆளட்டும்—வாழட்டும்!' என்றுதான் கூறுகிறோம்.

"வடநாட்டிற்கும் — தென்னாட்டிற்கும் இன்று இருக்கும் 'எஜமானர்—அடிமை; வரிகளை வாரிக் கொண்டு போவோர்—வரி கொடுப்போர்; வாழுவோர்—வாடுவோர்,' என்ற நிலையிலிருக்கும் உறவு—தொடர்பு நீங்க வேண்டும்; அவரவர்,—அவரவர் நாட்டில்—வடநாட்டவர் அவர்களது வடநாட்டிலும், திராவிடர் திராவிட நாட்டில் ஆளவும், வாழவுமான நிலையிருக்க வேண்டும்; இருவருக்கும் நேச உறவு இருக்கட்டும்."

மேலும் பேசிய அண்ணா அவர்கள், வடநாட்டு ஆதிக்கம் பற்றியும், தென்னாட்டு அடிமை நிலை குறித்தும் சமுதாயக் கேடுகள் குறித்தும் விரிவாகப் பேசினர்.

★★★★★★★★★★★★★★★★★

நாளை !

'உலகத்தைத் திருத்திய உத்தமர்கள்' என்ற தலைப்பில் அண்ணா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு நாளை வெளி வரும்.

★★★★★★★★★★★★★★★★★

மீர்சாகிப்பேட்டை அழகிரி நாடக மன்றத்தாரின்

'அத்தான்'

9-7-55 சனி மாலை 6 மணிக்கு

எழும்பூர் மியூசியம் தியேட்டரில் நடைபெறும்

பிற விவரங்கள் ?

1250 ஆண்டிற்குப்பின்

நீண்ட நேரம் தெரியும் சூரிய கிரகணம்

வரும் ஜூன் 20-ந் தேதி ஏற்படும் சூரிய கிரகணம் பூரணமாக இந்தியா முழுமையும் தெரியாது. கிரகணத்தில் ¾ பாகத்திற்கு அதிகமாக தென்னாட்டிலும், ¼ பாகத்திற்கும் குறைவாக வடநாட்டிலும் தெரியும்.

1250 ஆண்டுகளில் நீண்டநேரம் தெரியும் கிரகணம் இதுதான். சூரியன் பற்றிய ஆராய்ச்சிக்குத் தேவையான புள்ளி விவரங்களைச் சேகரிக்கும் உலக விஞ்ஞானிகளுக்கு இந்தக் கிரகணம் ஒரு வாய்ப்பாக அமைந்திருக்கிறதாம்.

ரஷ்யாவில் நேரு

மாஸ்கோ, ஜூன் 12—

ரஷ்யச் சுற்றுப் பயணத்தில் உள்ள இந்தியப் பிரதமர் பண்டித நேரு, ஸ்டாலின்கிராடிலிருந்து சிம்பரோல் எனுமிடத்திற்கு வந்துள்ளார்.

அங்கிருந்து நேரு கிரிமியாவின் தெற்குக் கரைக்குப் பயணமானார்.

கிரிமியா சோவியத் யூனியனில் இணைந்துள்ள தென்மேற்கிலிருக்கும் ஒரு சுதந்திரக் குடியரசாகும்; சிம்பரோல் இதன் தலைநகர்.

முன்பாக, பண்டிதர் ஸ்டாலின்கிராடில் உள்ள யுத்த நினைவுச் சின்னங்களைப் பார்வையிட்டதுடன் வால்கா நதிக்கரையில், ஸ்டாலின்கிராடை ஜெர்மானியரிடமிருந்து காப்பதற்காக போரிட்டு உயிர் நீத்த ரஷ்யப் போர்வீரர்களின் நினைவுச் சின்னத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர் என்று செய்திகள் கூறுகின்றன.

கி. வங்கத்தில் பல அரசியல் கைதிகள் விடுதலை

டாக்கா, ஜூன் 11—

கிழக்கு வங்க முதன் மந்திரி அபுல் உசேன் சர்க்கார் மேலும் 40 ஜாமீன் கைதிகளை விடுவிக்க உத்தரவிட்டிருக்கிறார்.

11 எம். எல். ஏ.-க்கள் உட்பட 52 பேர் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர்.

மொத்தம் 402 அரசியல் கைதிகள் கிழக்கு வங்கத்திலிருக்கின்றனர்.

முதன் மந்திரி, பதவி ஏற்றதும், அரசியல் கைதிகளை விடுவிக்கும் பிரச்சினைக்கே முதலிடம் தாம் போவதாகக் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

மீண்டும் அங்கே !

லாகூர், ஜூன் 12—

காஷ்மீர் பிரச்சினையை பாகிஸ்தான் மீண்டும் நிச்சயமாக ஐ. நா பாதுகாப்புக் குழுவில் தாக்கல் செய்யும் என நிச்சயமாகத் தெரிய வருகிறது.

இந்த தகவலை பாகிஸ்தான்—காஷ்மீர், விவகார மந்திரி மும்தாஜ் அலிகான் தெரிவித்திருக்கிறார்.

சதி செய்தோர் !

தகவல் தருவோருக்கு பரிசு

ஹாங்காங், ஜூன் 12—

தென் சீனக் கடலில் விபத்திற்கானான 'காஷ்மீர் இளவரசி' விமானத்தில் நாசவேலை செய்தவர்கள் பற்றிய தகவல் கொடுப்பவர்களுக்கு ஹாங்காங் போலீஸ் ஒரு லட்சம் ஹாங்காங் டாலர் (6250 ஸ்டர்லிங்; சுமார் ரூ 90,000) பரிசு தருவதாக அறிவித்திருக்கின்றனர்.

கழகக் கூட்டங்கள்

✶

கொடுங்கையூர் (சென்னை)

மூலக்கடை திடலில்

14—6—55 மாலை 6 மணிக்கு

தலைவர் : வே. இராகவன்

பேசுவோர் :

சி. பி. சிற்றரசு

என். வி. நடராசன்

மு. கிருட்டிணமூர்த்தி

தோழர் நாகூர் அனீபா இயக்கப் பாடல்கள் பாடுவார்

✶

சென்னை

பெரியமேட்டு, ஸ்டிங்கர்ஸ் வீதியில்

14—6—55 மாலை

தலைவர் : நல்லதம்பி

பேசுவோர்:

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

இளம்பரிதி

ஆர். டி. அரசு

மாநில மாநாட்டு நிதி அளிப்பு விழா

பம்பாய், கொலாபா கிளை தி. மு கழகச் சார்பில், தி மு கழக 2-வது மாநில மாநாட்டு நிதி அளிப்பு விழா தோழர் ஏ.எஸ். அன்பரசு தலைமையில் நடைபெறும். தோழர்கள் எஸ். தியாகராசன், ஆரியசங்காரன், த. மு பெற்கோ, சு. தங்கவேலன், இர. சண்முகராசன், தர்மராசன், வடவகுயல், எஸ் கே. ராஜூ, க.சு. செகநாதன், கே. கே. இராமநாதன் ஆகியோர் பேசுவர்.

தேதி குறிப்பிடப்படவில்லை.

—(ஆ-ர்.)

திருச்சி மாவட்ட தி.மு. கழகத் தோழர்கட்கு

"ஜூலை முதல் வாரத்தில் வட்டக் கழகங்கள் அமைக்க வேண்டியிருப்பதால், இதுவரை பதிவு செய்யப்பட்ட கழகங்கள் தவிர, பதிவு செய்யப்படாத கழகங்கள் 30—6—55-க்குள் தேர்தல் நடத்தி, மாவட்டக் கழகத்துக்கும், தலைமைக் கழகத்துக்கும் அனுப்பி பதிவு செய்ய வேண்டுகிறேன்,"

என்று, திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஏ. பி. தர்மலிங்கம் கேட்டுக்கொள்கிறார்.

மன்னார்குடி வட்ட தி.மு.கழக (கிளை) செயலாளர்கட்கு

15—6—55 மாலை 4 மணிக்கு, மன்னார்குடி விவசாய ஆபீஸ் எதிர்க் கட்டிடத்தில், மன்னார்குடி வட்ட தி. மு. கழகக் கமிட்டிக் கூட்டம் நடைபெறும். மாநில மாநாட்டு நிதி அனுப்பாத கிளைக் கழகச் செயலாளர்கள், நிதியோடு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

லால்பேட்டை தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

15—6—55 அன்று, லால்பேட்டை தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது பல முக்கிய நிகழ்ச்சிகள் பற்றி முடிவு செய்யப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராண்ய செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுவது. ஆசிரியர்: இரா நெடுஞ்செழியன், எம். ஏ.